# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 04.06.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா ஹாமீம் ஸஜ்தா -ன் 31 முதல் 33 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

**பொருள் : எங்கள் இறைவன் அல்லாஹ் எனக்கூறி, இக்கொள்கையில் நிலைத்திருப்பவர்களிடம், நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம்; உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்திகளை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று (கூறியவாறு) வானவர்கள் இறங்குவர்.**

**(மேலும் அவர்கள்) நாங்கள் இவ்வுலக வாழ்க்கையிலும் மறுமையிலும் உங்கள் நண்பர்கள்; உங்கள் மனங்கள் விரும்புவதெல்லாம் அதில் உங்களுக்குக் கிடைக்கும். மேலும் நீங்கள் கேட்பதெல்லாம் அதில் உங்களுக்குக் கிடைக்கும்.**

**இது மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய (இறை)வனிடமிருந்துள்ள விருந்தோம்பலாக இருக்கும் (என்றும் கூறுவர்.) (41:31-33)**

ஒவ்வொரு வாரமும் எனக்கு ஆயிரக்கணக்கான கடிதங்கள் வருகின்றன. அவற்றைப் படிக்கிறேன். சில கடிதங்கள் நோய்களுக்காக துஆ செய்வதற்காக எழுதப்படுகின்றன. சில கடிதங்கள் உறவினர்களுக்காக எழுதுகின்றனர். சில கடிதங்கள் திருமணம் சம்பந்தப்பட்ட மகிழ்ச்சியான செய்திகளை உள்ளடக்கியதாகவும், சில கடிதங்கள் சம்பந்தங்களைத் தேடி தமது துயரங்களை வெளிப்படுத்துவதாகவும், சில கடிதங்கள் தொழில் அபிவிருத்திக்காகவும், மற்ற பிரச்சனைகளுக்காகவும், தேர்வில் தேர்ச்சி பெறுவற்காக மாணவர்களும், பெற்றோர்களும் எழுதியதாகவும் இருக்கின்றன. சுருக்கமாக இவை போன்றவையும் இன்னும் பல கோணங்களிலும் எழுதப்படுகின்றன.

ஆனால் கடந்த வாரம் எனக்கு வந்த கடிதங்களின் எண்ணிக்கை வழக்கமாக வருகின்ற ஆயிரக்கணக்கான கடிதங்களை விட அதிகமானதாகும். எல்லா கடிதங்களின் கருத்தும் ஒரேமாதிரியானதாக இருந்தது. லாஹூரில் நடந்த மகத்தான ஷஹாதத்துகள் – உயிர்த் தியாகிகளைக் குறித்து தமது உணர்வை வெளிப்படுத்தியிருந்தனர்.

அனைத்தும் துக்கங்கள், கஷ்டங்களால் நிறைந்தவையாக இருந்தன. கோபத்தை வெளிப்படுத்துபவையாக சில கடிதங்கள் ஆரம்பித்து, பிற்பகுதியில் பொறுமையையும், துஆவையும் வெளிப்படுத்தியதாக இருந்தன. இவர்கள் அனைவரும் தமது பிரச்சனைகளை மறந்து விட்டனர். இத்தகைய கடிதங்கள் பாகிஸ்தானிலிருந்தும் வருகின்றன. அரபு நாடுகளிலிருந்தும், இந்தியாவிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும், ஆப்பிரிக்காவிலிருந்தும் வருகின்றன. நம் மக்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்ற உணர்வில் பாகிஸ்தானியர் மட்டும் உணர்வை வெளிப்படுத்தவில்லை. மாறாக, ஒவ்வொரு நாட்டில் வசிப்பவரும் முஹம்மதிய மஸீஹிடம் பைஅத் செய்யும் வாய்ப்பு பெற்ற அஹ்மதிகள் ஒவ்வொருவரும் தமது நெருங்கிய இரத்த உறவினருக்கு அநீதியிழைக்கப்பட்டது போன்று துடித்தனர்.

பிறகு உயிர்த்தியாகிகளின் நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் கடிதங்கள் வந்தன. தமது மகன், தமது தந்தை, தமது சகோதரன், தமது கணவர் ஆகியோரை இழந்து விட்டு எனக்கு ஆறுதல் தெரிவிக்கின்றனர். எனக்கு கிடைத்த தகவலை வைத்து பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டினரையும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சி செய்யப்பட்டது. நான் ஒவ்வொரு வீட்டிற்கும் போன் செய்த போது ஒவ்வொரு குழந்தையும், தந்தையும், தாயும் இறை விருப்பத்தில் திருப்தி அடைந்திருப்பதைக் கண்டேன்.

கடிதங்களில் உணர்வுகளை மறைத்து விட முடியும். ஆனால் தொலைபேசியில் அவர்களின் நேரடியான உறுதிமிக்க குரலில் அவர்களின் பேச்சைக் கேட்கும் போது அதிலிருந்து ஒரு தூதுச் செய்தி எனக்கு கிடைத்தது.

இறைவனது கூற்றிற்கேற்ப இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் – நாங்கள் அல்லாஹ்விடமிருந்தே வந்தோம். அவனிடமே திருப்பப்படுவோம் என்ற முஃமின்களின் எதிர்நடவடிக்கையை எடுத்து வருகிறோம். நாங்கள் முழு உணர்வுடன் இறை திருப்தியை எதிர்பார்க்கிறோம் என்பதே அவர்களின் பதிலிலிருந்து நான் பெற்ற தூதுச் செய்தியாகும்.

மேலும் அல்லாஹ்வின் விருப்பத்தில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம். ஒன்றிரண்டு தியாகங்கள் என்ன? எம்மிடமுள்ள அனைத்தையும் இரத்தத்தின் ஒவ்வொரு துளியையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்காக தியாகம் செய்ய தயாராகி விட்டோம்.

எமது தியாகங்கள் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன், தூதர்களில் சிறந்தவர் என்று அறிவிப்போம்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாக்களுடைய முன்மாதிரியை உலகில் இன்று பரப்பியவர்கள் நாங்கள் தான் என்ற செய்தியை அவர்களிடமிருந்து பெற்றேன்.

அவர்களின் அனைத்து கடிதங்களையும் படித்து அந்த உணர்வுகளை நான் உங்களிடம் அப்படியே வெளிப்படுத்திக் காட்டுவது எனது சக்திக்குட்பட்ட விஷயம் அன்று. ஆனால் அவை எனக்கு ஓர் உறுதியான நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது அன்பு கொண்டவர்களே! நிச்சயமாக உயரிய ஓர் இலக்கைப் பெறுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இறைவன் வழங்கினான். இம்மக்கள் பொறுமையுடையவர்களும் உறுதிமிக்கவர்களாவர். இவர்களை விட்டுப் பிரிந்து சென்றவர்களும் உறுதியான பாதத்துடன் இறைவன் முன் சென்று சேர்ந்துள்ளார்கள்.

**அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுகிறவர்களை, இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால் நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை (2:155)** என்ற வசனத்தை உண்மையாக்கியுள்ளனர்.

எங்களை இறந்தவர்கள் என்று கூறாதீர்கள். நாங்கள் உயிருள்ளவர்கள் ஆவோம். நாங்கள் நிரந்தரமான உலகில் இறைவனின் திருப்தியைப் பெற்று விட்டோம். இறைவனது மார்க்கத்திற்கு பாசனநீர் ஆகி விட்டோம். எமது இரத்தத்தின் ஒவ்வொரு துளியின் மூலமும் ஆயிரக்கணக்கான மரங்களும் பழங்களும் உருவாகவிருக்கின்றன. எங்களை மலக்குகள் ஏந்திக் கொண்டுள்ளனர். நாம் எங்கெங்கு எத்தனை குண்டுகளை வாங்கி மரித்தோம் என்று உயிரைத் தரும்போது தெரியாது. எமக்கு ஏற்பட்ட காயங்களைப் பற்றியும் எங்களுக்கு தெரியாது. எமது எல்லா விருப்பங்களையும் இறை விருப்பத்தின் முன் அர்ப்பணித்து விட்டோம். ஆனால் எமது நாவில் இந்த காயங்கள் மற்றும் அர்ப்பணிப்புகளுக்காக புகார் முறையீடுகள் வருவதற்குப் பதிலாக தரூதும் துஆவும்தான் வெளிப்பட்டன. இவை எங்களுக்கு இறை விருப்பத்தைப் பெற்றுத் தந்திருக்கின்றன என்ற தூதுச் செய்தியை தந்து விட்டு சென்றுள்ளனர்.

ஒரு காயமுற்றவர் தமது வாயிலிருந்து சலிப்பை வெளிப்படுத்திய போது அருகில் கிடந்த இன்னொரு காயமுற்றவர் கூறினார். தைரியத்துடன் இருங்கள். எந்த நோக்கமும் இலக்கும் இல்லாமலே மக்கள் தமது உயிரை கொடுத்து விடுகின்றனர். நீங்கள் மகத்தான நோக்கத்திற்காக உங்கள் உயிரை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று கூறி தேற்றினார். இதனைக் கேட்டு (சலிப்புடன்) உஃப் என்று கூறிய அம்மனிதர் தமது உயிர் பிரியும் வரை ஸலவாத் ஓதிக் கொண்டிருந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஸலவாத் கூறியவாறு, நாங்கள் முஹம்மதிய மஸீஹுடன் செய்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டோம் என்ற உறுதிமொழியை அல்லாஹ்வின் தூதரிடத்தில் வழங்கினார்கள். காயமுற்றவர்களின் வீடியோ ரிக்கார்டிங் பார்த்தேன். ஒருவர் தனது அலைபேசியில் (Cell) அதை பதிந்துள்ளார். வேதனைமிக்க அந்த காட்சி எனது உள்ளத்தில் விளக்க முடியாத ஓர் உணர்வை ஏற்படுத்தியது. அம்மக்களிடமிருந்து அல்லாஹ் நிச்சயமாக தியாகத்தை வாங்கியுள்ளான். ஆனால் மலக்குகள் அவர்கள்மீது அமைதியை இறக்குகின்றனர்.

மணிக்கணக்கில் எந்த வெறுப்பும் இல்லாம் பொறுமையைக் காட்டினர். ஒரு சிறுவன் லாஹுரிலிருந்து போனில் என்னிடம் கூறினான். எனது 19 வயது சகோதரர் மீது 4-5 குண்டுகள் பாய்ந்தன. ஆனால் படுகாயமுற்ற நிலையிலேயே மணிக்கணக்கில் அங்கேயே கிடந்தார். அந்த இடத்திலிருந்து அசையும் இல்லை. துஆ செய்து கொண்டிருந்தார். போலீஸ் மட்டும் உரிய நேரத்தில் வந்திருந்தால் பல மதிப்பு வாய்ந்த உயிர்களை காப்பாற்றி இருக்கலாம். ஆனால் முழு ஆட்சி அமைப்புமே குழப்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் போது அவர்களிடம் நாம் என்ன எதிர்பார்க்க முடியும்? ஓர் இளைஞர் வீசப்பட்ட கை எறிகுண்டை தனது கையினால் பிடித்து எதிரிகளை நோக்கி திருப்பி வீசுவதற்காக இருந்த நேரத்தில் அக்குண்டு வெடித்து அவர் ஷஹீதானார். தனது உயிரை அர்ப்பணித்து அவர் பலரது உயிரை காப்பாற்றியுள்ளார். இன்னொரு பெரியவர் தனது உயிரைக் கொடுத்து பல இளைஞர்களையும் குழந்தைகளையும் காப்பாற்றினார். தாக்குதல் செய்தவர்களின் எல்லா குண்டுகளையும் தனது மார்பில் தாங்கிக் கொண்டார்.

இன்று Police I.G. மிகவும் பெருமிதத்துடன், போலீஸ் இரு தீவிரவாதிகளைப் பிடித்து விட்டது என்று பேட்டி கொடுக்கிறார்.

மேலிருந்து கீழ் வரை எல்லா சந்தர்ப்பத்திலும் அரசு உண்மையையும் பொய்யையும் பிரித்தறிவதை கை விட்டு விட்டது. பிறகு இதுபோன்ற விளக்கங்கள்தான் வரும்!

இரு தீவிரவாதிகளை பிடித்தது கூட நமது இளைஞர்கள்தான். (போலீஸ் அல்ல.) பிடித்தவர் கூட மிகவும் பலவீனமானவர். அதாவது உடல்ரீதியாக மிகவும் மெலிந்த மனிதர் ஆவார். ஆனால் ஈமானில் வலுவுள்ளவராக இருந்தார். அவர் ஒரு கையால் தீவிரவாதியின் கழுத்தைப் பிடித்துக் கொண்டார். இன்னொரு கையால் அவனது (புல்லட்) ஜாக்கெட்டைப் பிடித்து ஓட விடாமல் பிடித்தார். அவரது பிடியிலிருந்து தப்பிப்பதற்கு அவன் தனது ஜாக்கெட்டையே கிழிக்க முயற்சி செய்தான்; எனினும் தப்பிக்க முடியவில்லை. தீவிரவாதிகளான அந்த பையன்கள் பாவம் 18-19 வயது இளைஞர்கள். அல்லது 20-22 வயதினர். ஏழை குடும்பத்தைச் சேர்ந்த பையன்கள். சிறு வயதிலேயே ஏழ்மையின் காரணத்தால் அநீதியிழைப்பவர்களின் பிடியில் மாட்டிக் கொள்கின்றனர். அவர்கள் மார்க்கக் கல்வியின் போர்வையில் தீவிரவாதத்தை கற்றுக் கொடுத்து விட்டனர். பிறகு அந்த இளைஞர்களை மூளைச்சலவை செய்கின்றனர். இந்த தற்கொலையால் உங்களுக்கு சொர்க்கம் கிடைக்கும் என்று போதிக்கின்றனர். ஆனால் இந்த மரணம் இறைவனது கோபத்தைத் தூண்டிவிடும் மரணமாகும்.

ஆனால் இந்த விஷயத்தை இப்போது இவர்கள் புரிந்து கொள்ள முடியாதவர்களாகி விட்டனர். இவர்களை தூண்டி விடும் தலைவர்கள் ஒருபோதும் அவர்கள் முன் வருவதில்லை. தமது சொந்த பிள்ளைகளை இதுபோன்று பலிகொடுப்பதும் இல்லை. இதுபோன்ற தற்கொலைப் படைகளில் ஏழை பையன்களைத் தான் தியாகம் செய்ய வைக்கின்றனர். அதுவும் அவர்கள் மூளைச் சலவை செய்யப்படுவதன் மூலமே இதனை செய்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் இரண்டு தீவிரவாதிகள் பிடிபட்டிருந்தாலும் அவர்களை நமது இளைஞர்கள் தான் பிடித்தனர். மலக்குகள் இறங்கி ஆறுதல் சொன்ன காட்சி இந்த காயமுற்றவர்களைக் காணும்போது நமக்கு தென்பட்டது.

அவர்களின் பின்னால் இருப்பவர்களும் இறைவனது சிறப்பான அருளால் ஆறுதல் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதனால் இந்த சிறப்பான அருளை நாம் பார்க்கிறோம். எனது அடியார்களின் உள்ளங்களை அமைதிப்படுத்துங்கள் என்று அல்லாஹ் அந்த மலக்குகளுக்கு கட்டளையிட்டிருந்தான். துஆ செய்கின்ற இம்மக்களுக்கு ஆறுதலும் பொறுமையையும் வழங்குங்கள் என்று அந்த மலக்குகளுக்கு கட்டளையிட்டிருந்தான். துஆ செய்கின்ற இம்மக்களுக்கு ஆறுதலும் பொறுமையையும் வழங்குங்கள் என்று அந்த மலக்குகளுக்கு கட்டளையிட்டிருந்தான். ஒவ்வொரு வீட்டிலும் இத்தகு காட்சி காணப்பட்டது. அவர்களைப் பார்த்து நமக்கு வியப்பு ஏற்படுகிறது. எத்தகைய மக்களை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வழங்கியுள்ளான்! **ஒவ்வொருவரும், நான் எனது மனவருத்தத்தையும், கவலையையும் அல்லாஹ்விடமே முறையிடுகின்றேன் (12:87)** என்ற வசனத்தையே செயல்படுத்திக் காட்டினர்.

இதுவே ஒரு முஃமினைப் பிரித்தறிவிக்கும் அடையாளமாகும். முஃமின்களின் துயரத்தின்போது பொறுமையை மேற்கொள்ளுமாறு இறைவன் ஆறுதல் அளித்துள்ளான்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

**நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமை, பிரார்த்தனை இவற்றின் மூலம் (அல்லாஹ்விடம்) உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (2:154)**

ஓர் அடியார் இறைவனுக்கு முன்னால் எல்லாவற்றையும் எடுத்து வைக்கிறார். அவர் உண்மையான இறை அடியாரும், ரஹ்மானின் அடியாரும் ஆவார். அழுது புலம்புவதற்குப் பதிலாக, கூச்சலிடுவதற்குப் பதிலாக, சட்டத்தை தனது கையில் எடுப்பதற்கப் பதிலாக பொறுமை, துஆவில் தனது உணர்வுகளை கொண்டு செல்கிறார். பிறகு அல்லாஹ்வுடைய நற்செய்திக்கு உரியவராகிறார்.

முஃமின்களின் ஜமாஅத்திற்கு அல்லாஹ் ஆரம்பத்திலேயே சோதனைகளைப் பற்றி கூறிவிட்டான். சோதனைகள் நிச்சயமாக வரும் என்று கூறியுள்ளான்.

**அல்லாஹ் கூறுகிறான்:**

**ஓரளவு பயத்தாலும், பசியாலும், செல்வம், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (தூதரே!) பொறுமையாளர்களுக்கு நீர் நற்செய்தியைக் கூறுவீராக. (2:156)**

ஆகவே, பொறுமை, துஆ செய்பவர்களுக்கு நற்செய்தி கூறியுள்ளான். தனது திருப்தியின் சொர்க்கத்திற்கு வாரிசாக்குவதாகக் கூறியுள்ளான். அல்லாஹ்வின் வழியில் ஷஹீத் ஆனவர்களுக்குமே சொர்க்கத்தின் நற்செய்தி உள்ளது. அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப இவ்வுலகில் வாழ்பவர்களுக்கும் சொர்க்கத்தின் நற்செய்தி உள்ளது. அத்தகையவர்கள் அல்லாஹ்வின் திருப்தியை விரும்புகின்றனர்.

நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் முஃமின்களின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளான். எவர்கள் சோதனைகளின்போது பொறுமையைக் காட்டுகிறார்களோ அவர்களுக்கு மலக்குகள் ஆறுதல் வழங்குகின்றனர். முஃமின்கள் எல்லா புறத்திலும் சோதனையில் ஆட்படுகின்றனர். உயிர்நஷ்டம் ஏற்படுகிறது. செல்வத்திற்கு இழப்பு ஏற்படுகிறது. கண்ணியத்திற்கு களங்கம் ஏற்படுகிறது. அல்லது களங்கப்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. எல்லா இடத்திலிருந்தும் இறைஉதவியின் வாசலும் அடைக்கப்பட்டு விட்டதோ என்று தோன்றுகிறது. அந்நிலையில் பொறுமை காட்டி நிலைநிற்பவர்களுக்கு இறைவன் தனது அருளை வழங்குகின்றான். அவர்கள் அல்லாஹ்வின் அடைக்கலத்தின் கீழ் வருகின்றனர். முஃமினாகிய ஒருவர் நினைத்துப் பார்க்காத இடத்திலிருந்து அவருக்கு வெற்றியும் உதவியும் வருகிறது. பல அற்புதங்களை அல்லாஹ் காட்டுகின்றான். அதனை அவர் நினைத்துக்கூட பார்த்திருக்க இயலாது.

ஆகவே உறுதியாக நிலைத்து நிற்பது நிபந்தனையாகும். இந்த நிலைநிற்றலைக் காட்டிய லாஹூர் அஹ்மதிகளுக்கு வாழ்த்துக்கள்! சென்றவர்களுக்கும் சரி; அவருக்குப் பின்னால் நிற்பவர்களுக்கும் சரி.

நிச்சயமாக அல்லாஹ் உண்மையான வாக்குறுதியை உடையவனாவான். தனது வாக்குறுதியை நிறைவேற்றுவான். இது உள்ளங்களை அமைதிப்படுத்துவதாக அவன் கொடுத்த இந்த வாக்குறுதி நிறைவேறியதற்கான அடையாளமாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகிறார்கள்:**

எமது இறைவன் அல்லாஹ் தான் என்று கூறியவர்கள் பொய்யான கடவுளர்களை விட்டுவிட்டு உண்மையில் நிலைத்து நின்றனர். விதவிதமான சோதனைகள், ஆபத்துகள் வரும் போது உறுதியான பாதத்துடன் நிலைநின்றனர். அவர்களின் மீது மலக்குகள் இறங்குகின்றனர்.

நீங்கள் மகிழ்ச்சியடையுங்கள். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட மகிழ்ச்சி உங்களுக்கு தரப்பட்டு விட்டது என்று கூறப்படும். நாம் இவ்வுலக வாழ்விலும் மறுமையிலும் உங்கள் நண்பர்கள் ஆவோம் என்று கூறப்படும்.

இந்த வார்த்தைகளிலிருந்து அல்லாஹ் நமக்கு சுட்டிக்காட்டியுள்ள விஷயமாவது இத்தகைய நிலைத்து நிற்றல் மூலமாக இறைவனது திருப்தி கிடைக்கிறது.

**இஸ்திகாமத் ஃபவ்கல் கராமத்** – நிலைத்து நிற்றல் அற்புதங்களை விட உயர்ந்தது என்பது உண்மையான விஷயமாகும். **இஸ்திகாமத்** – நிலைத்து நிற்றலின் சிறப்பு என்னவெனில், நாலாபுறமும் தொல்லைகளால் சூழப்பட்ட நிலையில் இறைவழியில் உயிர், கண்ணியத்தை இழந்து ஆறுதல் அளிக்கும் எந்த விஷயமும் கண்ணில் தெரியாத நிலையில் – இறைவன் கூட ஆறுதல் அளிக்கும் ஒரு கஷ்ஃப், கனவுகள் அல்லது இல்ஹாம்களை நிறுத்தி வைத்திருக்கும் நிலையில் அதிபயங்கரமான நிலையில் அம்மனிதன் எந்த கோழைத்தனத்துடனும் புறமுதுகு காட்டாமல், விசுவாசத்திற்கு எந்த பங்கமும் ஏற்படாமல், சத்தியத்தை கைவிடாமல், அவமானத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு மரணத்தின் மீது திருப்தி அடைந்து உறுதியுடன் நிலைத்து நிற்பதற்கு எந்த நண்பரையும் எதிர்பார்த்து நிற்காமல் – எந்தவொரு நற்செய்தியையும் வேண்டாமல் இக்கட்டான சூழ்நிலையிலும் முழுக்க முழுக்க பலவீனமான நிலையிலும் எந்த ஆறுதலையும் பெறாத நிலையிலும் உறுதியாக நிலைத்து நிற்பதன் பெயராகும். முகம் திருப்பியவாறு இறை நியதிக்கு எதிராக நிற்காமலும் நிலைகுலைந்து புலம்பாமலும் சோதனை முடியும் வரை உறுதியாக நிற்பதே இஸ்திகாமத் ஆகும். இந்த இஸ்திகாமத் மூலமாக இறைவன் கிடைக்கின்றான். இதுவே ரஸூல்மார்கள் – நபிமார்கள், சித்தீக்குகளின் மண்ணிலிருந்து இப்போது வரை வந்து கொண்டிருக்கும் நறுமணம் ஆகும்.

நமது இந்த உயிர் தியாகிகளின் மண்ணிலிருந்தும் இந்த நறுமணம் வந்து கொண்டிருக்கிறது. நமது மூளைகளுக்கு நறுமணம் அளித்துக் கொண்டிருக்கின்றது. அவர்களின் இஸ்திகாமத் – நிலைத்து நிற்றல் நம்மை அழைத்து அழைத்து கூறுகிறது. பொறுமையை நீங்கள் பற்றிப் பிடித்துள்ளீர்கள். இதனை விட்டு விடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் தனது வாக்குறுதியில் உண்மையானவனாவான். சோதனைகள் தொடர்ந்து கொண்டே செல்வது உங்கள் உறுதியை அசைத்துவிட வேண்டாம். நன்றி கேடான வார்த்தை எதுவும் உங்கள் வாயிலிருந்து வெளியாகி விட வேண்டாம். இந்த ஷுஹதாக்களைப் பற்றி சிலர் கனவுகளும் கண்டுள்ளனர். மகிழ்ச்சியுடன் சொர்க்கத்தில் அவர்கள் சுற்றித் திரிகின்றனர். அதுமட்டுமன்றி (அவர்களுக்கு) பெரும் விருதுகள் வழங்கப்படுகின்றன. உலகியல் விருதுகள் மிக நீண்ட சேவைக்குப் பிறகுதான் தரப்படுகின்றன. இவ்வுலகில் நீண்டகால உழைப்பிற்குப் பிறகு தான் விருதுகள் கிடைக்கின்றன. ஆனால் இங்கு நமது இளைஞர்கள்கூட விருதுகளைப் பெற்றுள்ளனர். நமது அழுகையும் துக்கமும் இறைவனுக்கு முன் மட்டுமே இருக்க வேண்டும். அதில் குறைவே ஏற்படக் கூடாது.

லாஹூர் மக்களைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஓர் இல்ஹாம் இறங்கியது. **லாஹூரில் நமது தூய உறுப்பினர்கள் உள்ளனர். லாஹூரில் நம்மீது நேசம் கொண்டவர்கள் உள்ளனர்** என்ற இல்ஹாம் இறங்கியது.

நீங்கள் இதனை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். இறைவனது திருப்தியை பொறுமை மூலம் பெற முயற்சி செய்ய வேண்டும். பிறகு இது தொடர்பாக பல முன்னறிவிப்புகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ளான்.

எனவே நீங்கள் (லாஹூர்வாசிகள்) நற்பேறு பெற்றவர்களாவீர்கள். உங்கள் ஊர் பெயருடன் சேர்த்து தனது தூய மஸீஹின் மூலம் நற்செய்தி வழங்கியுள்ளான்.

எனது பார்வையில் எதிரிகள் உயிர் சேதம் விளைவிப்பதற்காக இந்த தாக்குதலை நிகழ்த்தவில்லை. மாறாக, அத்துடன் இன்னும் சில நோக்கங்களும் உள்ளன. ஒரு பயத்தை உருவாக்கி பலவீனமானவர்களை அஹ்மதிய்யத்தை விட்டு அகற்ற வேண்டும்; இளைஞர்களிடம் ஒரு நிம்மதியின்மையை உருவாக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும்.

உயிரையும், உடைமையையும் தியாகம் செய்வதற்கு உறுதிபூண்ட தாய்மார்களின் சந்ததிகள் அவர்கள் என்பது எதிரிகளுக்கு தெரியாது. அந்த இளைஞர்களின் உள்ளங்களில் விசுவாசத்தைக் காட்டும் வேகம் உள்ளது.

எதிரிகளின் இன்னொரு எண்ணம் என்னவெனில், இத்தகைய பெரும் தியாகத்தை அஹ்மதிகளால் சகிக்க முடியாமல் வீதிக்கு வந்து போராட்டத்தில் குதிப்பார்கள். வன்முறையைக் கையில் எடுப்பார்கள். அதனைக் காரணம் காட்டி அரசு தான் விரும்பும் விதத்தில் அஹ்மதிகளுடன் நடந்து கொள்ளலாம். பிறகு அஹ்மதிய்யத்தின் அவப்பெயரை உருவாக்கலாம் என்று நினைக்கின்றனர். பிறகு உலகிற்கு காட்டுவதற்காக உதவி செய்யலாம் என்று நினைக்கின்றனர்.

ஆனால் அஹ்மதிகள் இறைவனால் வழங்கப்பட்ட பொறுமை, துஆவுடன் அல்லாஹ்விடம் உதவி கேட்டு அவனது அடைக்கலத்தில் வருபவர்கள் ஆவர் என்று எதிரிகளுக்கு தெரியாது. கிலாஃபத்தின் கொடியின் கீழ் ஒன்றுகூடியிருப்பவர்கள் ஒருபோதும் அத்தகைய எதிர்நடவடிக்கையைக் காட்டமாட்டார்கள். எதிரிகளால் எதிர்பார்க்கப்படாத நல்லதோர் எதிர்நடவடிக்கையை அஹ்மதிகள் காட்டினர். இந்த அநீதியான செயலைக் கண்டு வெளிநாடுகளும் எதிர்ப்புக் குரல் கொடுத்தன.

மீடியாவும் இவர்களை தோலுரித்துக் காட்டியது. இறுதியில் இம்மக்களுக்கு அனுதாபம் காட்ட வேண்டும் என்ற உணர்வு அரசுக்கு ஏற்பட்டது. தமக்கு ஏற்பட்ட தலைகுனிவை அழிக்க வேண்டும் என்று கருதியது. இதுவரை உலகிற்கு, குறிப்பாக இம்மக்களுக்கு அஹ்மதிய்யத் என்றால் என்னவென்று தெரியவில்லை. கடந்த 120 ஆண்டுகளில் ஒவ்வொரு வினாடியும் பார்த்தும் இவர்களின் கண்கள் திறக்கவில்லை.

அஹ்மதிகள் ஓர் இமாமின் குரலைக் கேட்டு உட்கார்வார்கள்; எழுந்திருப்பார்கள். இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாவர். அவர்களின் எஜமானரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களுடைய போதனையை உலகில் நடைமுறைப்படுத்த வந்தார்கள். அவரோ மிருக இயல்பு கொண்டவர்களை இறை மனிதராக்கினார்கள். இப்போது நாம் விலங்குகளின் நிலையிலிருந்து வெளியேறி இறை மனிதர் ஆவதற்கான வழியில் அடியெடுத்து வைக்க வேண்டியதுள்ளது. இத்தகைய மனிதர்கள் எப்படி இந்த நியதியை உடைத்து விட்டு வெளியேற முடியும்? வெட்டு, குத்து, கொலை என்ற எதிர்நடவடிக்கையை நாம் எப்படி எடுக்க முடியும்? நாம் அல்லாஹ்வின் திருப்திக்கு முன்னுரிமை வழங்குபவர்களாவோம். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் என்று கூறி பிரச்சனையை இறைவனிடம் விடக்கூடியவர்கள். நாம் நமது கவலையையும் துக்கத்தையும் இறைவனிடம் விட்டுவிட்டோம். அவனது விருப்பத்தில் திருப்தி கொண்டு அவனது தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

மிருகத்தனமும் முட்டாள்தனமும் உடையவர்களே! உங்களுக்கு வாழ்த்துக்கள்!

இறைவனின் பெயரால் இறைவனின் படைப்புகளின், இறைவனது அன்பிற்குரியவர்களின் இரத்தத்துடன் விளையாடி விட்டீர்கள்.

சாதாரண மக்களை மார்க்கத்தின் பெயரால் மீண்டும் ஒருமுறை 14-15 நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கீழ்த்தரமான வாழ்க்கைக்கு இட்டுச் சென்று விட்டீர்கள்.

இவர்கள் கூறுகிறார்கள்: எமக்கு எந்த சீர்திருத்தவாதியின் தேவையும் இல்லை. எந்த மஸீஹ் மவ்ஊதையும் ஏற்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. எமக்கு குர்ஆன் ஷரீஅத் போதுமானது. உங்களது இந்த செயலைத்தான் குர்ஆனும், ஷரீஅத்தும், எஜமானரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கொண்டு வந்தார்களா?

நிச்சயமாக இல்லை. மனித குலத்திற்கு பெரும் உதவி செய்யக் கூடிய அவரைப் போன்ற ஓர் மனிதர் இனி பிறக்க முடியாது. கியாமத் வரை பிறக்க முடியாது. அந்த மனித குலத்தின் பேருபகாரம் செய்தவருக்கு கெட்ட பெயர் ஏற்படுத்தும் பயனற்ற வேலையைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

நிச்சயமாக கியாமத் நாளில் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கலிமா உங்கள் ஒவ்வொருவரையும் பிடித்து நீங்கள செய்த தீய செயல்களுக்கான தீய முடிவுக்கு எடுத்துச் செல்லும்.

நமது பணி பொறுமை, துஆவை பயன்படுத்துவது தான். இன்ஷா அல்லாஹ் இதனை ஒவ்வொரு அஹ்மதியும் நடைமுறைப்படுத்துவார். இந்த பொறுமையின் முன்மாதிரியை உலகம் கண்ட போது அந்நியர் கூட வியந்து போயினர். இந்த அநீதி மற்றும் கொடுமைக்குப் பிறகு நமது எதிர்நடவடிக்கை எப்படி இருந்தது? என்பதைப் பார்த்து மற்றவர்கள் அனுதாபம் காட்டியது மட்டுமின்றி அஹ்மதிய்யத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டனர். அதுமட்டுமல்ல, தாம் பைஅத் செய்ய விரும்புவதாகவும் தெரிவித்துள்ளனர். இந்த அநீதியை நீங்கள் எங்களுக்கு இழைத்துள்ளீர்கள். அதற்கு பதிலாக உலகில் எங்களுக்கு வெகுமதிகள் கிடைக்கத் தொடங்கி விட்டது. சில சம்பவங்களை எடுத்துச் சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் சிலவற்றைக் கூறும்போது உணர்ச்சி வசப்பட்டு விடுவேன் என்று அஞ்சுகிறேன். எனவே அனைத்தையும் நான் கூற இயலாது. சில சம்பவங்களை மட்டும் கூறுகிறேன்.

நாயிப் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் செயலர் எழுதுகிறார்:

ஒரு தொழுகையாளி ஒரு ஜனாஸா தொழுகையை முடித்து விட்டு வந்தார். மற்றவரை நோக்கி கூறினார். இன்னொரு சன்மானம் கிடைத்துள்ளது. அது ஷஹீதான தந்தையின் மகனாக இருக்கும் சன்மானம் எனக்கு கிடைத்துள்ளது. என்னிடம் கூறினார். உறுதியும் வீரமும் அதிகமாக உள்ளது. மாடன் டவுணில் இஜாஸ் சாஹிபின் சகோதரர் ஷஹீதானார். பள்ளிவாயிலிலேயே அந்த செய்தி கிடைத்தது. மருத்துவமனைக்கு செல்லுங்கள் என்று கூறப்பட்டது. அதற்கு அவர் எனது சகோதரர் இறை சந்நிதானத்தில் சென்று சேர்ந்து விட்டார். ஒருவேளை பிற அஹ்மதி சகோதரர்களுக்கு எனது இரத்தம் தேவைப்படலாம். எனவே நான் இங்கேயே இருப்பேன் என்று அவர் கூறினார்.

ஒரு தாய் கூறினார்: எனது மடியில் இருந்த மகன் இறைவனது மடியில் போய் சேர்ந்து விட்டார். அவன் அந்த இறைவனின் அமானிதம் ஆவான். அவனிடமே திரும்ப ஒப்படைத்து விட்டேன்.

நமது கொள்கைப் பிரச்சாரர் மஹ்மூது அஹ்மத் சாஹிப் மாடன் டவுணில் குத்பா கொடுத்துக் கொண்டிருந்த போது துஆ, இஸ்திக்ஃபார், தரூது ஓதுமாறு திரும்பத் திரும்ப கூறினார். சில திருக்குர்ஆன் வசனங்களையும் ஓதினார். உரத்த குரலில் சலவாத்தும் ஓதினார். நாரே தக்பீரும் கூறினார். அப்படியே ஷஹாதத்தின் பானத்தை சுவைத்து விட்டார்.

சத்தார் அப்துஸ் ஸமது சாஹிப் கூறினார். ஃபஜ்ர் தொழுகையில் சக்ஸ்கந்தர் உடைய சம்பவங்கள், ஷஹாதத்துகள் பற்றி கூறினார். அவர் அங்கு அப்போது நியமிக்கப்பட்டிருந்தார்.

இன்னொரு சாஹிப் எழுதுகிறார்: வெளியில் சிலர் ஏணிப்படியின் கீழ் பள்ளிவாயிலின் திண்ணையில் 100-150 பேர் நின்றிருந்தனர். தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டவாறு பள்ளிக்குள் வந்து ஒரு மூலையில் நின்று சுட்டனர். ஒரு மனிதர் கிட்டத்தட்ட வெளியில் வந்து விட்டார். ஆனால் அவர் வெளியில் முற்றிலும் வந்து விட்டால் வெளிப் பள்ளியில் இருந்த 100-150 பேர் இப்போது உயிருடன் இருந்திக்க மாட்டார்கள். ஆனால் எனது கண்களுக்கு முன்பாக 65 வயதுள்ள ஓர் அன்ஸார் அவர்களுக்கு பின்னால் வெளியேறி வாசலை மறித்தார். சரியாக அவரது நடு மார்பில் குண்டு பாய்ந்தது. அங்கேயே ஷஹீதானார். அவரது இந்த வீரச் செயலால் தீவிரவாதிகள் வெளியில் வருவதற்கு சற்று நேரம் பிடித்தது. பிறகு அவன் கை எறி குண்டை வீசினான். இந்த நேரத்தில் பல அஹ்மதிகள் பாதுகாப்பான இடத்திற்கு போய் சேர்ந்து விட்டனர். அவர் கூறுகிறார்: வெளியில் வந்து பார்க்கும் போது ஏணிப்படியில் நிறைய பேர் ஷஹீதாகிக் கிடந்தனர்.

ஒரு சாஹிப் கூறுகிறார்: ஜப்பானிலிருந்து அங்கு சென்றிருந்தார். ஆகரீன் (பின்னவர்) களின் இந்த ஷஹாதத் காட்சி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அருளுக்குரிய காலத்தின் நினைவுகளை புத்துணர்வூட்டியது. ரப்வாவின் மலையின் கீழ் இருந்த தூயவர்களின் உடலை அடக்கிய போது பலமுறை நான் இக்காலத்தில் இல்லை என்ற உணர்வு ஏற்பட்டது. பொறுமை மற்றும் தைரியத்தின் பெரும் முன்மாதிரியைக் காட்டினர். அதனை வார்த்தைகளால் விளக்குவது கடினம். என் அருகில் உட்கார்ந்திருந்த ஒருவரிடம் கேட்டேன். அவர் ஒரு அன்சார் சகோதரர் ஆவார். எனவே அவரிடம் சச்சா, உங்கள் உறவினர்களுள் யார் இறந்துள்ளார்கள்? அந்த அன்ஸார் எனது மகன் என்று கூறினார்.

எழுதுபவர் கூறுகிறார்: அவரது முகத்தைப் பார்த்து விட்டு எனக்கு பேச்சு வரவில்லை. பிறகு அந்த அன்ஸார் கூறினார். அல்ஹம்துலில்லாஹ்! இதுதான் அல்லாஹ்வின் விருப்பமாக இருந்துள்ளது. எனது நாலாபுறமும் உறுதிவாய்ந்த அவரது முகமே தென்பட்டது. இத்தகைய உறுதிவாய்ந்த ஒருவருக்கு முன்னால் ஏதாவது பொருத்தமில்லாத செயலைச் செய்து நானே வெட்கப்படுகின்ற அளவிற்கு நடந்து கொள்ளக்கூடாது என்று என்னை நானே தேற்றிக் கொண்டேன்.

அம்மனிதர் மீண்டும் எழுதுகிறார்: நான் பல்வேறு தரப்பட்ட மக்களைக் கடந்து சென்றேன். அவ்விடத்தில் விதவிதமான அனுபவங்களைப் பெற்றேன். மிகவும் இரத்தம் சிந்திக்கிடந்த ஒரு ஷஹீதைப் பாருங்கள் என்ற குரல் அவரிடமிருந்து வந்தது.

இவ்வாறு எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. ஒரு பெண் எழுதுகிறார்: எனது சிறிய மகன் ஜுமுஆ தொழுவதற்காக சென்றான். இறைவன் தனது அருளால் அவனை காப்பாற்றினான். மஸ்ஜிதில் இரத்த ஆறு ஓடியபோது. எமது அண்டை அயலார் தொலைக்காட்சியில் பார்த்து விட்டு ஓடி வந்தனர். எமது வீட்டில் அழுகையாக இருக்கும் என்று கருதினர். ஏனெனில் மஸ்ஜிதுக்கு அருகில் எனது வீடு இருந்தது. ஆனால் நான் அவர்களிடம் கூறினேன். எனது விவகாரங்கள் இறைவனோடு உள்ளன. எனது குழந்தையைப் பற்றி எனக்கு என்ன கவலை! அனைவருமே நமது உறவினர்கள்தான். எனது குழந்தை இறந்தாலும் இறை சன்னிதானத்தை நெருங்கி இருப்பான்; தப்பித்து இருந்தாலும் இறைநெருக்கத்தைப் பெறுவான். அந்தப் பெண்மணியின் பதிலைக் கேட்டு வியந்து போய் மற்ற பெண்கள் திரும்பிச் சென்று விட்டனர்.

பிறகு இந்த இக்கட்டான சூழ்நிலை பற்றி மேலும் எழுதுகிறார்: ரப்வாவில் உள்ளவர்கள் துயரம் நிறைந்த உள்ளத்துடன் இரவு பகலாக பணி செய்தனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி.

ஒரு தாயிற்கு 18 வயதுடைய ஒரே மகன் மற்றும் பெண்கள். அந்த பையன் ஷஹீதான செய்தி கிடைத்தது. அந்த பெற்றோரும் மிகவும் பொறுமையை மேற்கொண்டனர். நாங்களும் ஜமாஅத்திற்காக அர்ப்பணிக்கப்பட வேண்டும் எனில் எமது உயிரையும் அர்ப்பணிக்கத் தயார் என்றனர்.

சிரியாவைச் சேர்ந்த முஸல்லம் தூரபி சாஹிப் அந்நாட்களில் அவர் அங்கு சென்றிருந்தார். அவருக்கும் சிறிது காயம் ஏற்பட்டது. ஷாம் நாட்டைச் சேர்ந்த அஹ்மதி கூறுகிறார். நான் ஒருபோதும் அதுபோன்ற காட்சியைக் கண்டதில்லை. எதிரிகள் துப்பாக்கிச் சூடு நடத்திக் கொண்டிருந்த போது எந்த புலம்பலும் ஒப்பாரியும் இல்லை. ஒவ்வொருவரும் அமைதியாக தமது வேலையைச் செய்தனர். ஜமாஅத் அமைப்பிலிருந்து தரப்பட்ட வழிகாட்டலின்படி செயல்பட்டனர். இது எனக்கு புதிய அனுபவமாகும். நான் ஒருபோதும் இத்தகைய காட்சியைக் கண்டதேயில்லை.

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத் ஆகும். இத்தகைய குழந்தைகளைத்தான் இந்த தாய்மார்கள் பெற்றிருக்கின்றனர். தியாகத்தின் மிக உன்னத உதாரணங்கள் இவை. எனது பையன்கள் என்ன ஆனார்கள்? எனது மகன் ஷஹீதாகி விட்டானே என்ற கவலை இல்லை. முழு ஜமாஅத்திற்காகவும் கவலையுடன் துஆ செய்து கொண்டிருந்தார்கள்.

அஹ்மதி தாய்மார்களே! இந்த தூய உணர்வையும், சிந்தனையையும் ஒருபோதும் மரணிக்க விடாதீர்கள். இந்த உணர்வும், உறுதியும் இருக்கும் வரை எந்த எதிரியும் ஜமாஅத்தின் ஒரு ரோமத்தைக் கூட அசைக்க முடியாது.

ஓர் அஹ்மதி எழுதுகிறார்: நான் ரப்வாவில் இருந்து அங்கு (லாஹூருக்கு) சென்றிருந்தேன். ஒரு இளைஞருடன் சேர்ந்து ஷஹீதானவர்களின் பிரேதங்களை எடுத்துச் சென்று கொண்டிருந்தேன். கடைசியாக நான் எடுத்துச் சென்ற பிரதேத்தை என்னுடன் வந்தவருடன் சேர்ந்து ஆம்புலன்ஸ் வரை கொண்டு சேர்த்தேன். அப்போது என்னுடன் பிரேதத்தை எடுப்பதற்காக வந்தவர் கூறினார். இது எனது தந்தை ஆவார் என்று கூறிவிட்டு சோர்ந்து இருந்துவிடவில்லை. திரும்ப மஸ்ஜிதுக்கு வந்து கொடுக்கப்பட்ட பணியில் மூழ்கி விட்டார். இதுவே முஹம்மதிய மஸீஹின் உன்னத மக்களாவர். அவர்கள் தமது உணர்வுகளை முழுக்க முழுக்க இறைவனிடம் மட்டுமே எடுத்து வைக்கின்றனர். இதுபோன்று எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. அனைத்து சம்பவங்களும் பிறகு தொகுத்து எழுதப்படும்.

எல்லாரும் ஒன்றுபட்டுக் கூறும் ஒரு விஷயம், தீவிரவாதிகள் சுடும் போது ஒருவரும் பதறவில்லை. அமீர் சாஹிப், கொள்கைப்பரப்புநர்கள், பொறுப்பாளர்கள் கூறிய வழிகாட்டலின்படி செயல்பட்டனர். அவர்கள் உயிரோடு இருந்த வரை கட்டளைகளை செயல்படுத்தினர். அதற்குப் பிறகு மக்கள் ஒரு சுவருக்குப் பின்னால் நிறுத்தப்பட்டனர். அங்கிருந்தும் துஆவே செய்து கொண்டிருந்தனர்.

ஒரு பெரியவர் தொடர்ந்து ஸஜ்தாவில் இருந்தார். அவரது வலது புறமும் இடது புறமும் தோட்டாக்கள் பாய்ந்து கொண்டிருந்தன. அவர் அதை பொருட்படுத்தவே இல்லை.

இதுவே உண்மையான ஈமான் உள்ளவர்களின் காட்சியாகும். பல கடிதங்கள் இது சம்பந்தமாக எனக்கு வந்து கொண்டேயிருக்கின்றன.

**சூரா அஹ்ஸாபில் அல்லாஹ் கூறுகிறான்:**

**நம்பிக்கை கொண்டவர்களுள் தாங்கள் அல்லாஹ்விடம் செய்திருந்த வாக்குறுதியினை உண்மைப்படுத்திய மனிதர்கள் உள்ளனர். அவர்களுள் சிலர் (தாங்கள் போர் செய்து மரணமடைய வேண்டும் என்ற) தங்கள் எண்ணத்தை நிறைவேற்றியுள்ளனர். அவர்களுள் மற்றுஞ்சிலர் (இன்னும் அதனை) எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் (தங்கள் எண்ணத்தில்) சிறிதும் மாற்றம் ஏற்படுத்தவில்லை. (33:24)**

மற்றுஞ்சிலர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்ற வசனத்திற்கேற்ப இவர்களது கடிதங்கள் அவர்களது விசுவாசத்தை நமக்கு உறுதிப்படுத்திக் காட்டியுள்ளனர். இந்த செயல் அஹ்மதிகளை பலவீனப்படுத்தி விடும்; ஜமாஅத்தின் ஆற்றலை அழித்துவிடும் என்று எதிரிகள் நினைத்தனர்.

பெருநகரங்களில் வாழ்பவர்கள் ஒருவேளை உறுதியான ஈமான் கொண்டிருக்க மாட்டார்கள் என்று நினைத்தனர்.

ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பெருநகரங்களில் வாழும் அந்த அனைவரது உள்ளங்களிலும் ஈமானை நிறைத்துள்ளார்கள் என்பது எதிரிகளுக்கு என்ன தெரியும்?

அம்மக்கள் மார்க்கத்திற்காக பெரும் தியாகங்கள் செய்யவும் தயாராக இருக்கின்றனர். நிச்சயமாக அவர்களும் இந்த உலகில்தான் வசிக்கின்றனர். ஆனால் உலகம் அவர்களின் இலக்காக இருக்கவில்லை. மார்க்கத்திற்காக அழைக்கப்பட்டால் **இதோ வந்து விட்டோம்** என்று கூறி வந்து நின்று விடுகின்றனர்.

நான் ஏற்கனவே கூறியது போன்று அஹ்மதிகள் விலங்குகள் அல்ல. மனித நேயத்தின் கொடியைப் பிடிப்பவர்கள் ஆவர். எவ்வாறிருப்பினும் இந்த அஹ்மதிகளும் இதே சமுதாயத்திலிருந்து தோன்றியவர்கள்தான். மார்க்கத்தின் பெயரால் மிருகத்தனத்தையும் அறிவீனத்தையும் காட்டுகின்ற இம்மக்களின் சமுதாயத்தில் இருந்துதான் அஹ்மதிகளும் தோன்றியுள்ளனர். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட பிறகு இதே மக்கள்தான் மார்க்கத்திற்காக தியாகங்கள் செய்கின்றனர். ஆனால் இறைவன் கூறிய வழிமுறைப்படி செய்கின்றனர்.

ஆனால் இந்த சம்பவங்களை பத்திரிகைகளும், பாகிஸ்தானின் பத்திரிகைகளும் வெளியிட்டுள்ளன. இறைவன் இவர்களுக்கு நற்கூலியை வழங்குவானாக! உண்மையை எழுதிவிட்டு மவ்லவிமார்களின் எதிர்நடவடிக்கைக்கு பயந்து பழைய கதையை தொடர்ந்துவிட வேண்டாம். இதுபோன்று பல்வேறு நாடுகளில் உள்ள பத்திரிகைகளில் இருந்தும் தூதுச் செய்திகள், கருத்துக்கள் வந்தன. பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள், பிரிட்டனின் பிரதிநிதிகள், Parliament உறுப்பினர்கள் உட்பட நடந்த சம்பவத்திற்கு அனுதாபத்தையும் மரணித்தவர்களுக்கு இரங்கலையும் வெளிப்படுத்தியுள்ளன. அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக!

மற்றவர்கள் ஒருபுறிருக்க மஜ்லிஸ் தஹப்புஸே கத்மே நுபுவ்வத் தரப்பிலிருந்து செய்தித்தாளில் இது மிகவும் மிருகத்தனமான செயலாகும்; அஹ்மதிகளுக்கு எதிராக நிகழ்ந்த கொடுமையாகும் என்று வெளியிட்டுள்ளார்கள். இது உண்மை என்றால், பல பேனர்கள் அஹ்மதிகளுக்கு எதிராக காட்டப்பட்டன. சுவர்களிலும், வீதிகளிலும் – ஏன்? உயர்நீதிமன்ற நீதிபதியின் பெயர்ப்பலகையின் கீழ் எல்லாம் அஹ்மதிகளுக்கு எதிராக அசுத்தமான வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளீர்கள். அஹ்மதிகள் முர்தத் – மார்க்கத்தை விட்டு விலகியவர்கள் என்றும், கொலை செய்யப்படத் தகுந்தவர்கள் என்றும் எழுதியுள்ளீர்கள். நீங்கள்தான் அறிவற்றவர்களின் உணர்வைத் தூண்டுகின்றீர்கள். இப்போது உலகம் திரும்பிப் பார்க்கும் போது உலகம் தம்மை தவறாகப் பேசுவதிலிருந்து தப்பிப்பதற்காக இவ்வாறு செய்தி வெளியிடுகின்றனர்.

அஹ்மதிகளுக்கு எதிராக இந்தப் பெயர் தாங்கிய ஆலிம்களால் காழ்ப்புணர்ச்சி தூண்டப்படுகிறது. இதுவே நடந்த அனைத்துச் சம்பவங்களுக்கும் காரணமாகும்.

பாகிஸ்தானின் Chief Judge சாஹிப் சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் பத்திரிகைகளில் அறிக்கை வெளியிடுகின்றார். இங்கு இவ்வளவு பெரிய அநீதி நடந்துள்ளது. பெரிய பேனர் வைத்துள்ளார்கள். போஸ்டர் வைத்துள்ளார்கள். இதற்கு ஓர் அறிக்கை விடுக்க வேண்டும் என்ற எண்ணம் கூட வரவில்லை. மக்களை தூண்டுகின்ற இந்த உலமாக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தோன்றவில்லை. நீதியை நிலைநாட்டுவது உங்கள் மனதிற்கு பிடித்தவர்களுடன் மட்டும் சம்பந்தப்பட்டதா?

நமது அழுகை, துக்கம் எல்லாம் இறைவனுக்கு முன்பு மட்டும்தான் என்று நான் ஏற்கனவே கூறினேன். இவர்களிடம் நாம் எதனையும் எதிர்பார்க்கவில்லை. இவர்களின் தகுதியைத்தான் நான் சுட்டிக் காட்டுகிறேன். ஒவ்வொரு சோதனைக்குப் பிறகும் (அஹ்மதிகளுக்கு) தியாக உணர்வும், தமது தகுதியும்

உயரவே செய்கின்றன. எந்தவொரு அடிமையும் நம்மை அதிலிருந்து தடம்புரள வைக்க இயலாது. நிச்சயமாக இன்று உலகில் தீவிரவாதம் அதிகமாகி உள்ளது. பாகிஸ்தானில் அதன் உச்சகட்ட காட்சி தென்படுகிறது.

ஆனால் பாகிஸ்தானில் மட்டுமே தீவிரவாதிகளுக்கு அஹ்மதிகளை எதிர்க்கின்ற விஷயத்தில் அரசின் பாதுகாப்பு உள்ளது. எனவே ஒருவர் தமது மனதில் நினைத்ததை செய்கிறார்.

தீவிரவாதிகள் பிடிபட்டனர். அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? தண்டனை கொடுக்கப்பட்டதா? இன்றுவரை பாகிஸ்தான் வீதிகளில் அவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். எனவே எந்த அஹ்மதியும் இவர்களிடம் எந்த எதிர்பார்ப்பும் வைக்க முடியாது. நமது எஜமானன் நமது அல்லாஹ் தான். நாம் அவன் மீதே தவக்குல் வைக்கிறோம். அவனே நமக்கு உதவியாளன் ஆவான். இன்ஷா அல்லாஹ் அவன் நமக்கு எப்போதும் உதவி செய்து வருவான். நம்மை பாதுகாத்து வருவான். இம்மக்களிடமிருந்து வருங்காலத்திலும் எந்த நல்லதையும் நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே அஹ்மதிகள்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அதிகமாக துஆ செய்ய வேண்டும். **அல்லாஹ்வே! இவர்களுக்கு எதிரில் உன்னையே நாங்கள் கேடயமாக்குகிறோம். இவர்களின் விஷமத்திலிருந்து எம்மை பாதுகாப்பாயாக!** என்று துஆ செய்ய வேண்டும்.

மேலும் என் இறைவனே! எல்லாம் உன் தொண்டிற்காகவே உள்ளன. என் இறைவனே! நீயே என்னை பாதுகாப்பாயாக; உதவி செய்வாயாக! கருணை காட்டுவாயாக!என்ற துஆவையும் அதிகமாக செய்து வர வேண்டும்.

இது தவிரவும் இன்னும் அதிகமாக துஆ செய்யுங்கள். உறுதியான பாதத்திற்காக துஆ செய்யுங்கள். இவர்களின் வீழ்ச்சிக்காகவும் இறைவனிடம் அழுது மன்றாடி துஆ செய்யுங்கள். இரு பள்ளிவாசலிலும் காயமடைந்தவர்களுக்காக துஆ செய்யுங்கள். காயமடைந்தவர்களுள் டாக்டர் இம்ரான் சாஹி1ப் இன்று ஷஹீதாகி விட்டார்கள். இன்னா லில்லாஹ் வஇன்னா இலைஹி ராஜிவூன். மற்ற காயமடைந்தவர்களுக்கு அல்லாஹ் நிவாரணம் வழங்குவானாக. ஒவ்வொரு அஹ்மதிகளையும் ஒவ்வொரு தீங்கிலிருந்தும் காப்பானாக!

அஹ்மதிகள் பாகிஸ்தானை உருவாக்குவதில் பெரும் தொண்டாற்றி உள்ளார்கள். இன்று நாங்கள் தான் பாகிஸ்தானுக்கு சொந்தக்காரர்கள் ஆவோம் என்று வாதிப்பவர்கள் அனைவரையும் விட அதிகமாக தொண்டு செய்திருக்கின்றனர். எனவே நாட்டின் நிலைப்பிற்கும் நீங்கள் துஆ செய்ய வேண்டும். இவர்களின் விஷமத்தில் இருந்து தப்பிக்கவும் இவர்களுக்கு படிப்பினையூட்டும் முடிவின் அடையாளம் கிடைக்கவும் துஆ செய்யுங்கள். இவர்கள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் அமைதியை குலைத்து விட்டனர்.

அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் ஒவ்வொரு தீமையிலிருந்தும் பாதுகாப்பானாக.

இன்னொரு விஷயத்தையும் நான் கூற விரும்புகிறேன். ஓர் அஹ்மதி மிக உணர்வுப்பூர்வமாக கடிதம் எழுதுகின்றார். நல்ல படித்தவர்கள் ஜமாஅத்திற்கு சேவை செய்பவர்கள் அவர்களின் கடிதங்களில் உள்ள வார்த்தைகள் என்னை வியப்பில் ஆழ்த்தின. அந்த வாசகம் இதுவாகும்.

எதிரிகள் மதிப்பு வாய்ந்த பல வைரங்களை மண்ணில் வீசி விட்டார்கள்.

இது முற்றிலும் தவறாகும். நாம் இழந்த அந்த வைரங்கள் மண்ணில் வீணாகிப் போய் விடவில்லை. ஆம் எதிரிகள் மண்ணில் புரட்டி விட முயன்றனர். ஆனால் அல்லாஹ் அவர்களை முன்பை விட உயர்த்தியே உள்ளான். அந்த வைரங்களைத் தூக்கி உயர்ந்த இடத்தில் பொருத்தி விட்டான். நிரந்தர வாழ்வை வழங்கி விட்டான்.

ஒவ்வொரு வைரமும் தமது பின்னால் விட்டுச்சென்ற பல வைரங்களை பட்டை தீட்டி விட்டது. சென்றுபோன அந்த வைரங்களை மின்னும் நட்சத்திரங்களாக்கி இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத் என்ற வானத்தின் மீது பொருத்தி அழகாக்கி விட்டான். அவற்றிற்கு புதியதொரு ஒழுங்கமைப்பை தந்தான். அவை நமக்கு புதிய வழியைக் காட்டின.

எந்தவொரு எதிரியும் நமது இழப்பின் மூலம் தமது இலக்கில் வெற்றியடைய முடியாது. ஒவ்வொரு ஷஹாதத்தும் புதிய பல கனிகளை உருவாக்கி விட்டன.

அல்லாஹ் இந்த எல்லா ஷஹீதுகளின் தகுதியையும் மேன்மேலும் உயர்த்திக் கொண்டே செல்வானாக! நாமும் இஸ்திகாமத்துடன் (நிலைநிற்றலுடன்) மார்க்கத்திற்காக தியாகம் செய்து கொண்டே செல்வோமாக!

ஷுஹதாக்களைப் பற்றி கூற நினைத்தேன். ஆனால் இதுவே அதிகமாகி விட்டது. இனிவரும் குத்பாக்களில் சுருக்கமாக கூறுவேன். கிட்டத்தட்ட 85 உயிர்த்தியாகிகள் ஒவ்வொருவரைப் பற்றியும் சுருக்கமாக அறிமுகப்படுத்தினால் கூட கணிசமான நேரம் ஆகி விடும். ஜுமுஆவுக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அதேபோன்று இந்த சம்பவத்திற்குப் பிறகு நாரோவாலில் நமது அஹ்மதி ஒருவரை ஷஹீதாக்கி உள்ளனர். அவரது பெயர் நிஃமத்துல்லாஹ் சாஹிப் ஆவார். இவர் வீட்டிற்கு வந்து வெளிப்புற முற்றத்தில் உறங்கிக் கொண்டிருந்தார். கத்தியால் குத்தி ஷஹீதாக்கி விட்டார்கள். அவரது மூத்த மகன் காப்பாற்ற வந்தார். அவரையும் காயப்படுத்தினர். அவர் மருத்துவமனையில் இருக்கிறார். அல்லாஹ் அவருக்கு நிவாரணம் வழங்குவானாக! மர்ஹூமின் தகுதியை உயர்த்துவானாக!

இவருக்கு ஒரு மனைவி, மூன்று மகன்கள், மூன்று மகள்கள் உள்ளனர். இவரது உறவினர்களில் இரண்டு பேர் லாஹூரில் ஷஹீதாகி உள்ளனர். கொலை செய்தவர் தஹப்புஸே கத்மே நுபுவ்வத் அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆவர். ஒரு பக்கம் இது மிகவும் கெட்ட செயல் என்று கண்டித்துள்ளனர். மறுபக்கம் தம்மக்களைத் தூண்டி விட்டு கொலை செய்ய வைக்கின்றனர். அஹ்மதிகளை கொல்லுங்கள்; சொர்க்கத்திற்கு வாரிசாகுங்கள் என்கின்றனர்.

கொலை செய்தவர் பிடிபட்டார். லாஹூரைச் சார்ந்தவர். நான் இவரை கொலை செய்ய வந்தேன். உலமாக்கள் அப்படித்தான் கூறினர். எனவே இந்த நல்ல வேலையைச் செய்து நற்கூலி பெறுவதற்காகவே வந்தேன் என்று ஒப்புக் கொண்டுள்ளார்.

அதுமட்டுமல்ல; பிடிபட்ட பிறகும், எந்தவோர் அஹ்மதியையும் நாங்கள் உயிருடன் விடமாட்டோம் என்று கூறினர். இதுவே இவர்களின் நிலையாக உள்ளது. எங்களுக்கு கெட்ட பெயர் தரப்படுகின்றது என்று புலம்புகின்றனர். ஆனால் தாமே தமக்கு கெட்ட பெயரை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியையும் ஒவ்வொரு தீமையிலிருந்தும் பாதுகாப்பானாக! மிகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். நான் ஏற்கனவே கூறியது போன்று நோயாளிகளுக்கும் துஆ செய்யுங்கள். இறைவன் விரைவான முழுமையான நிவாரணம் வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 04.06.2010**

Translated by : **Muallim M. NIZAMUDEEN**
Reviewed by : **Moulvi S. ABDUL QADIR**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**